# எக்ஸ்டென்சிவ் நீட்ஸ் சர்வீஸ் -க்கு வரவேற்கிறோம்



Holland Bloorview
Kids Rehabilitation Hospital

## காப்புரிமை மற்றும் பொறுப்புத் துறப்பு

எக்ஸ்டென்சிவ் நீட்ஸ் சர்வீஸுக்கு வரவேற்கிறோம். © 2025 Holland Bloorview Kids Rehabilitation Hospital, எக்ஸ்டென்சிவ் நீட்ஸ் சர்வீஸ், எவிடென்ஸ் டு கேர் மற்றும் குடும்பத்தினர் ஆசிரியர்களாக இருக்கிறார்கள் மேலும் CC BY-NC 4.0 -இன் கீழ் உரிமம் பெற்றது

இந்த வள ஆதாரம் பகிர, ஏற்றுக்கொள்ள மற்றும் கட்டமைத்து மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டது. உங்கள் சொந்த சமூகத்திற்கு Creative Commons உரிம விதிமுறைகள் CC BY-NC 4.0 -இன் கீழ் தேவைப்படும் அசல் படைப்பாளர்களுக்கான அங்கீகாரம் வழங்கல் மற்றும் வணிகமல்லாத பயன்பாட்டுக்கு மாற்றியமைக்கவும் பொருந்தச் செய்யவும் தயங்க வேண்டாம்.


இந்த வள ஆதாரம், ஊனமுற்ற மற்றும் சிக்கலான மருத்துவ பிரச்சனைகளால் பாதிக்கப்பட்ட குழந்தைகளைப் பராமரிக்கும் பராமரிப்பு வழங்குநர்களுக்கானது. இது மருத்துவ அல்லது தொழில்முறை ஆலோசனை அல்லது ஆலோசனை வழங்கும் நோக்கத்துடனானது அல்ல.

## இந்த வள ஆதாரத்தை எவ்வாறு மேற்கோள் காட்டுவது

எக்ஸ்டென்சிவ் நீட்ஸ் சர்வீஸ், எவிடென்ஸ் டு கேர் மற்றும் குடும்பத்தினர் ஆசிரியர்களாக இருக்கிறார்கள். (2025). எக்ஸ்டென்சிவ் நீட்ஸ் சர்வீஸுக்கு வரவேற்கிறோம். Toronto, ON: Holland Bloorview Kids Rehabilitation Hospital.

## Holland Bloorview Kids Rehabilitation Hospital

Holland Bloorview Kids Rehabilitation Hospital (Holland Bloorview) என்பது கனடாவின் மிகப்பெரிய குழந்தைகள் மறுவாழ்வு மருத்துவமனையாகும், இது ஊனமுற்ற குழந்தைகளின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு அர்ப்பணிக்கப்பட்ட மருத்துவமனை. டொராண்டோ பல்கலைக்கழகத்துடன் முழுமையாக ஒன்றிணைக்கப்பட்ட ஒரு மருத்துவமனையாக, மாறுதலை விளைவிப்பதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் மற்றும் குழந்தைப்பருவ உடல் குறைபாடு மேலாண்மையில் அடுத்த தலைமுறை சிறப்பு நிபுணர்களுக்கு பயிற்சி அளிக்கவும் அங்கீகாரம் பெற்ற நாங்கள் Bloorview Research Institute மற்றும் Teaching and Learning Institute போன்றவற்றிற்கு தாயகமாக இருக்கிறோம். மேலதிக தகவலுக்கு, வருகை தரவும் www.hollandbloorview.ca.



# பொருளடக்கம்




1 Holland Bloorview ஓர் அறிமுகம்

2 எக்ஸ்டென்சிவ் நீட்ஸ் சர்வீஸுக்கு (ENS) வரவேற்கிறோம்

இந்த வளஆதாரம் குறித்து

3 உங்கள் வருகைகள் தொடர்பாக உங்களை தயார் செய்தல்

முன் பதிவுகள்

4 உங்கள் ENS பயணம்

5 ENS குழு

உங்கள் முதன்மை மருத்துவர் மற்றும் ENS குழு உறுப்பினர்களுடன் இணைந்து பணியாற்றுதல்

6 கூடுதல் தகவல்

இடை ஓய்வு
பாதுகாப்பு திட்டமிடல்
அளவீடுகளின் அடிப்படையிலான பராமரிப்பு

7 ஏற்பிசைவுகள்

வளர்ச்சி குழு

நிதியுதவி

# Holland Bloorview ஓர் அறிமுகம்

அனைவருக்கும் அர்த்தமுள்ள மற்றும் ஆரோக்கியமான எதிர்காலத்தை வழங்கும் என்று நாங்கள் நம்பும் Holland Bloorview Kids Rehabilitation Hospital (Holland Bloorview) -க்கு உங்களை வரவேற்கிறோம். குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் பராமரிப்பு வழங்குநர்களுடனான கூட்டாண்மையுடன், தனிப்பயனாக்கப்பட்ட மற்றும் தொழில்துறை சார்ந்த பராமரிப்பை நாங்கள் வழங்குகிறோம். ஆற்றல் மற்றும் செயல்திறனை வளர்த்தெடுப்பதிலும், குழந்தைகளுக்குத் தேவையான முக்கியமான நடவடிக்கைகளில் அவர்களைப் பங்குபெறச் செய்வதற்கு உதவுவதிலும் எங்கள் இலக்குகள் தீவிர கவனம் செலுத்துகின்றன.

பாதுகாப்பு, ஆதரவு மற்றும் அணுகக் கூடிய சேவைகளுடன் கூடிய கலாச்சார ரீதியாக செயல்திறன் மிக்க சூழமைப்பை வழங்குவதற்கு நாங்கள் உறுதி பூண்டுள்ளோம். மருத்துவமனையில், நாங்கள் மற்றவர்களை மரியாதையுடனும் கண்ணியத்துடனும் நடத்துகிறோம் மற்றும் பல்வேறு விருப்பத்தேர்வுகள் மற்றும் மதிப்பீடுகளுக்கு மதிப்பளித்து எந்த ஒரு முன் முடிவு அல்லது கற்பிதங்களும் இல்லாமல் அவர்களைப் புரிந்து கொள்ளும் பொருட்டு கவனமாகக் கேட்கிறோம்.

## Holland Bloorview -க்கு செல்வதற்கான வழி

வாகனத்தில் அந்தக் கட்டிடத்தை அணுகுவதற்கான பாதை Bayview Ave -ஐ ஒட்டிய Kilgour Rd ஆகும். Rumsey Rd -இலிருந்து அணுகலுக்கான பாதை எதுவும் இல்லை.

அணுகக்கூடிய வாகன நிறுத்துமிடம் அமைவிடத்தில் உள்ளது. வாகனம் நிறுத்துவதற்கான கட்டணம், வாகன நிறுத்துமிடத்திற்குள் நீங்கள் நுழைந்தவுடன் அறிவிக்கப்பட்டுவிடும். வாகன நிறுத்துமிடத்தின் நுழைவாயிலில் கிரெடிட் மற்றும் டெபிட் கார்டுகள் ஏற்றுக்கொள்ளப்படும். கட்டிடத்தினுள் நிறுவப்பட்டுள்ள இயந்திரத்தில் ரொக்கப் பணம் ஏற்றுக்கொள்ளப்படும். தெருவோர வாகன நிறுத்துமிடம் வரையறுக்கப்பட்ட அளவில் மட்டுமே இருக்கிறது.

Bayview Ave மற்றும் Rumsey Road வழியாக நீங்கள் மருத்துவமனைக்கு நடந்தே வரலாம்.

பொது போக்குவரத்து வசதியை நீங்கள் பயன்படுத்துவதாக இருந்தால் Eglinton Ave -இல் Bayview மற்றும் Rumsey Road ஆகிய இரண்டு இடங்களிலும் மேலும் Bayview Ave -இல் Kilgour Road -இலும் TTC பேருந்து நிறுத்தங்கள் உள்ளன.




## Family Resource Centre

முதல் தளத்தில் அமைந்துள்ள Grocery Foundation Resource Centre -இல் (திங்கள் கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை காலை 9:00 மணி முதல் மாலை 5:00 மணி வரை) வள ஆதாரங்கள் குறித்து அறிந்து கொள்ளவும், புதிய தகவல்களை கண்டறியவும் மற்றும் மற்றவர்களுடன் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவும்.

## வைஃபை சேவை

எங்களது வருகையாளர்களுக்கு தளம் முழுவதும் வைஃபை சேவைக் கட்டணமின்றி வழங்கப்படுகிறது. விருந்தினர்களுக்கான கடவுச்சொல்லை பிரதான வரவேற்பு மையத்தில் கேட்டறியவும்.

# எக்ஸ்டென்சிவ் நீட்ஸ் சர்வீஸ் -க்கு வரவேற்கிறோம்

ENS என்றும் அழைக்கப்படும் எக்ஸ்டென்சிவ் நீட்ஸ் சர்வீஸ் மருத்துவ, உடல் ரீதியான மற்றும் வளர்ச்சி அல்லது சமூக ஆரோக்கியத் தேவைகள் போன்ற பல்வகை பிரச்சனைகளால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் மற்றும் இளைஞர்களைக் கொண்ட குடும்பங்கள் மற்றும் பராமரிப்பு வழங்குநர்களுக்குத் தேவையான முக்கியமான ஆதரவை வழங்குகிறது. பாதிக்கப்படக்கூடிய குழந்தைகளுக்கு செயல்திறன் மிக்க மற்றும் ஆதரவு பராமரிப்பை உரிய நேரத்தில் கிடைப்பதை எளிதாக்க நாங்கள் விடாமுயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

எங்களுடன் இணைந்து பணியாற்றும் மக்களின் அனுபவங்களை எங்கள் குழு மிகவும் மதிப்பு மிக்கதாகக் கருதுகிறது. **உங்களுடைய** மற்றும் உங்கள் **குழந்தையின்** தேவைகளை அடையாளம் காண மற்றும் இலக்குகள் மற்றும் திட்டங்களை வகுத்தமைக்க மற்றும் அதில் பங்கேற்க உங்களை நாங்கள் ஊக்குவிக்கிறோம். இந்தத் திட்டத்தின் காலகட்டம் முழுவதும் நாங்கள் **பேரதிர்ச்சி- தகவல் வழங்கப்பட்ட** மற்றும் **அளவீட்டு அடிப்படையிலான பராமரிப்பை வழங்குவோம்.**

இந்த வள ஆதாரத்தில், நாங்கள் குழந்தை மருத்துவ பராமரிப்பு அமைப்பை அணுகுபவர்களை "குழந்தை," என்று குறிப்பிடுகிறோம். இதில் குழந்தைகள், பதின்ம வயதினர் மற்றும் இளைஞர்கள் உள்ளடங்குவார்கள். அனைத்து பராமரிப்பு வழங்குநர்களையும் "நீங்கள்," என்று குறிப்பிடுகிறோம்.

**பேரதிர்ச்சி- தகவல் வழங்கப்பட்ட பராமரிப்பு என்றால் என்ன?**

எங்கள் குழு வாடிக்கையாளர்களுடன் (வாடிக்கையாளர் என்பது ஒரு மருத்துவம் சாராத சொல் அது தனிப்பட்ட பராமரிப்பு வழங்கப்படும் நபரைக் குறிக்கிறது[1]) மற்றும் அவரது பராமரிப்பு வழங்குநர்களுடன் ஒரு வலிமையான உள்ளத் தொடர்பு மற்றும் நம்பகமான உறவை வளர்த்தெடுக்க செயல்படுகிறது. அவர்களது உடல் மற்றும் உணர்வு ரீதியான பாதுகாப்பு மற்றும் கண்ணியத்திற்கு எப்போதுமே முன்னுரிமை அளிக்கப்படும்.

**அளவீட்டு அடிப்படையிலான பராமரிப்பு என்றால் என்ன?**

அளவீட்டு அடிப்படையிலான பராமரிப்பில் வாடிக்கையாளர்கள் மற்றும் மருத்துவச் சிகிச்சை அளிப்பவர்கள் இருவருக்கும் வரையறுக்கப்பட்ட ஒரு கேள்வித்தாளைப் பூர்த்தி செய்யும் நடைமுறைகள் உள்ளடங்கும். இந்தக் கேள்வித்தாளிலிருந்து பெறப்படும் தகவல்கள் இந்தப் பராமரிப்பின் முன்னேற்றத்தைத் தொடர்ந்து கண்காணிக்க மற்றும் அது குறித்த தகவலறிந்த முடிவுகளை எடுக்கப் பயன்படுத்தப்படும்.

## இந்த வளஆதாரம் குறித்து

ENS –இல் நீங்கள் பங்குபெறும் காலத்தில் என்ன எதிர்பார்க்கலாம் என்ற தகவல்களை இந்த வள ஆதார வரவேற்பு உங்களுக்கு வழங்கும்.




பின்வரும் தகவல்களை நீங்கள் காண்பீர்கள்:

- இந்தப் பாராமரிப்பில் சம்பந்தப்பட்ட பல்வேறுச் சுகாதார பராமரிப்பு வழங்குநர்கள்
- குழந்தைகளுக்குச் சுகாதார பராமரிப்பு வழங்குநர்கள் எவ்வாறு ஆதரவை வழங்குகிறார்கள்
- சேவைகளைப் பெறும்போது எவற்றை எதிர்பார்க்கலாம்
- பாதுகாப்பான மற்றும் ஆதரவான வருகைகளுக்கு திட்டமிடுதல்
- இந்தச் சேவைகள் எவ்வாறு மதிப்பீடு செய்யப்படுகின்றன

[1]Shevell, M.I. (2009). 'அவர்களை' நாம் எவ்வாறு அழைக்கிறோம்?: 'நோயாளி' மற்றும் 'வாடிக்கையாளர்' என் இரு பிரிவாக அழைக்கிறோம். டெவலப்மெண்ட் மெடிசின் மற்றும் சைல்ட் நியூராலஜி *(Developmental Medicine & Child Neurology)*, 51: 770-772. https://doi.org/10.1111/j.1469-8749.2009.03304.x

# உங்கள் வருகைகள் தொடர்பாக உங்களை தயார் செய்தல்

தகவல்களைப் பகிர்ந்து கொள்வது உங்கள் முதல் வருகைக்கு தயார் நிலையில் இருக்க ENS -க்கு உதவும். குழந்தைப் பற்றி ENS குழு உங்களிடம் கேட்கக் கூடிய பல்வேறு வகையான தகவல்கள் சிலவற்றை உள்ளடக்கிய ஒரு பட்டியல் பின்வருமாறு:

- உடல் ஆரோக்கிய நிலை வரலாறு (உதாரணமாக, ஒவ்வாமைகள், மருத்துவ நிலைகள், மருந்துகள்)
- உடல் நலத்தைப் பாதிக்கக் கூடிய சவால்கள் (உதாரணமாக, பள்ளி வருகைப் பதிவு, தவறவிட்ட பணி நாட்கள்)
- தூண்டுதல்கள் மற்றும் பாதுகாப்பற்ற நடத்தை (உதாரணமாக, இரைச்சல், தேவைகள் குறித்து தகவல் கொள்ள இயலாத நிலை)
- உங்களுக்கு மற்றும் குழந்தை இருவருக்கும் எது முக்கியம் (உதாரணமாக, சமூகத் திறன்கள், சுதந்திரம், சமாளிக்கும் திறன்)

## முன் பதிவுகள்

திங்கள் முதல் வெள்ளி வரையிலான நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை வருகைக்கான முன் பதிவுகள் திட்டமிடப்பட்டுள்ளன, வருகைகளில் பங்கேற்பது குழந்தையை ஆதரிப்பதற்கான ஒரு வழியாகும். இலக்குகளை நோக்கி முன்னேறக் குழந்தை மற்றும் பராமரிப்பு வழங்குநர் தொடர்ந்து பங்கேற்பது மிக முக்கியம்

பின்வருவனவற்றை உறுதிப்படுத்திக் கொள்ளவும்:

- குழந்தையின் சுகாதார அட்டையை கொண்டு வருதல்
- முன் பதிவுகளின்போது உரிய நேரத்தில் வருகை புரிதல்

முன் பதிவுகளில் கலந்துகொள்வதில் கடினமாக இருந்தால், உங்களுக்கு எங்களால் எவ்வாறு உதவ முடியும் என்பதை அறிய ENS குழுவிடம் பேசவும்.



# உங்கள் ENS பயணம்

பெரும்பாலான வாடிக்கையாளர்களுக்கு, அவர்களுக்கான ENS கால அளவு ஏறத்தாழ 9 மாதங்களாக இருக்கும். பராமரிப்பு நடைமுறைகள் தொடங்கும்போது, நீங்கள் ENS குழுவைச் சந்திப்பீர்கள். இந்தக் காலகட்டத்தில் தீர்வு காணப்பட வேண்டிய குழந்தையின் தேவைகள் மற்றும் பொருத்தமான சிகிச்சை இலக்குகள் குறித்த ஒரு கண்ணோட்டத்தை அவர்கள் வழங்குவார்கள். ஏறத்தாழ 3 மாதங்களுக்கு ஒருமுறை நீங்களும் உங்கள் ENS குழுவினரும் சந்திப்பீர்கள்.

அத்தகைய பெரிய சந்திப்புக்களுக்கிடையே, குழந்தை பராமரிப்பின் பல்வேறு அம்சங்கள் தொடர்பாக நீங்கள் தனிப்பட்ட மருத்துவச் சிகிச்சை வழங்குநரைச் சந்திப்பீர்கள். இது இந்த திட்டத்தின் காலகட்டம் முழுவதற்குமான குழந்தையின் முன்னேற்றத்தை உறுதிசெய்யக் குழந்தைக்கு என்ன தேவை என்பதன் அடிப்படையில் இருக்கும். 9 மாதம் நெருங்கும் கட்டத்தில் அல்லது குழந்தை தன் இலக்குகளை நிறைவு செய்யும்போது (இதில் எது முதலாவதாக வருகிறதோ அந்தச் சந்தர்ப்பத்தில்) ஒரு திட்டமிட்ட டிஸ்சார்ஜ் சந்திப்பு நடைபெறும். ENS -இல் உங்கள் பங்கேற்பு காலம் நிறைவுற்ற பிறகு ஒரு பாதுகாப்பான நிலை மாற்றத்தை எதிர்கொள்வதை உறுதி செய்யக் குழந்தையின் சமூகப் பராமரிப்பு வழங்குநர்களிடம் முக்கியமான தகவல் ஏதேனும் இருந்தால் பகிர்ந்து கொள்ளப்படும். ஒவ்வொரு குழந்தையின் நிலை மாற்றத் திட்டம் மற்றும் ஆதரவுகள் அவரவர் தனிப்பட்ட தேவைகளின் அடிப்படையில் இருக்கும்.

மேலும் அறிந்து கொள்ள ENS வலைத்தளப் பக்கத்தை காணவும்.

## 1 மதிப்பீடு



## 2 சிகிச்சை




## 3 டிஸ்சார்ஜ்



# ENS குழு

## உங்கள் முதன்மை மருத்துவர் மற்றும் ENS குழு உறுப்பினர்களுடன் இணைந்து பணியாற்றுதல்

ஒவ்வொரு குழந்தையும் ஒரு முதன்மை மருத்துவர் ஒதுக்கீடு செய்யப்படுவார், அவர் ENS குழுவோடு தொடர்பு கொள்வதற்கான மையமாக இருப்பார். நீங்கள் எப்பொழுதெல்லாம் முதன்மை மருத்துவரைச் சந்திக்க வேண்டியதிருக்கும் என்பது அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் இருக்கும்:

பின்வருபவற்றில் உதவுவதே அவர்களின் பங்கு:

- ENS -இல் சிகிச்சையை மேற்பார்வையிடுவது
- உங்களுடன் மற்றும் ENS குழுவினருடன் கூட்டாண்மை அமைத்து இலக்குகளை நிறுவுவது
- உங்கள் மற்றும் குழந்தை ஆகிய இருவரது தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கான பராமரிப்பை வழங்க இதர ENS குழு உறுப்பினர்களுடன் இணைந்து பணிபுரிவது

ஒரு வாடிக்கையாளர் மற்றும் அவரது குடும்பத்தினரை மையப்படுத்திய பராமரிப்பு அணுகுமுறையை மேற்கொள்ள ENS குழுவினர் உறுதி பூண்டிருக்கிறார்கள். ENS -இல் குழந்தை பங்கேற்கும் காலம் முழுவதும் அவர்களின் சுதந்திரம் மற்றும் முடிவெடுக்கும் உரிமைகள் மதிக்கப்படும் என்பதே இதன் பொருள். நாம் இருவரும் இணைந்து பொருத்தமான வடிவமைக்கப்பட்ட பராமரிப்புத் திட்டம் மற்றும் இலக்குகளை உருவாக்குவோம். தேவைப்படும் அளவிலான பராமரிப்பு மற்றும் அது எவ்வளவு அடிக்கடி வழங்கப்படும் என்பது ஒவ்வொரு குழந்தையின் தனித்துவமான தேவைகளின் அடிப்படையில் இருக்கும்.

### ENS -இல் பல சுகாதார பராமரிப்பு வழங்குநர்கள் குழந்தைகள் மற்றும் பராமரிப்பு வழங்குநர்களுக்கு ஆதரவு அளிக்கிறார்கள். உங்கள் ஆரோக்கிய பராமரிப்புக் குழுவில் பின்வருபவர்கள் உள்ளடங்குவார்கள்:



# ENS குழு

ENS குழுவின் பல்வேறு உறுப்பினர்கள் பற்றியும், அவர்களின் பங்கு என்ன என்ற தகவலும் இந்த அட்டவணையில் பட்டியலிடப்பட்டிருக்கிறது:

| குழு உறுப்பினர் பங்கு | பங்கு பற்றிய விளக்கம் |
| --- | --- |
| நடத்தை பகுப்பாய்வாளர்கள் மற்றும் தொழிநுட்ப பணியாளர்கள் | • பள்ளி, சமூகம், ஓய்வு மற்றும் அன்றாட வாழ்க்கை செயல்களில் கூடுதல் பங்கேற்பை ஊக்குவித்து ஆதரிக்கும் தனித் திறன்களைக் கற்பிக்கவும் பயிற்சி செய்யவும் உதவுகிறது<br>• நடத்தைகள், வாழ்க்கையில் அதிக மகிழ்ச்சியை எவ்வாறு கொண்டு வருவது என்பதை நன்கு புரிந்து கொள்ள மற்றும் நடத்தை உத்திகளைப் பயன்படுத்துவதில் ஆதரவளிக்க குழந்தைகளுடன் இணைந்து செயல்படுவார்கள் |
| குழந்தை நல மருத்துவர் | • நோய், மருத்துவமனையில் அனுமதி, குழுக்கள் மற்றும் திட்டங்களுக்கு இடையிலான நிலை மாற்றங்கள், காயம் மற்றும் இயலாமை போன்ற சவால்களை முழுமையாகச் சமாளிக்க குழந்தைகளுக்கு உதவுகிறது<br>• குடும்பத்தை எதிர்கொள்ளல், ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கு உதவும் வகையிலான உடன்பிறந்தோர் ஆதரவை வழங்குகிறது |
| குழந்தை நல உளவியலாளர் | • மன ஆரோக்கியம், உணர்வுகள், சமூகம் மற்றும் நடத்தை சார்ந்த குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் உத்திகளை உருவாக்குகிறது<br>• பள்ளிகள், முகமைகள் மற்றும் சுகாதார பராமரிப்பு வழங்குநர்களைச் சந்தித்து ஆதரவை வழங்குகிறது |
| மருத்துவ மருந்தாளுநர் | • மருந்துகள் பாதுகாப்பாகப் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்கிறது<br>• குழந்தைகளின் தேவைகள், தொடர்ந்து கற்றல் மற்றும் வளர்ச்சிக்கு மருந்துகள் எவ்வாறு உதவக்கூடும் என்பதைப் புரிந்துகொள்ள மருத்துவக் குழுவுடன் இணைந்து செயல்படுகிறது |
| ஒருங்கிணைந்த சேவை திட்டவியலாளர் | • ENS -க்கான அணுகலை வழங்க Surrey Place (டொராண்டோ சமூக முகமை) உடன் கூட்டாண்மை அமைத்துள்ளது<br>• பரிந்துரைகள், நிதி வழங்கல் மூலாதார மதிப்பீடுகள் மற்றும் சமூக கூட்டாளர்களுடனான கூட்டாண்மை ஆகியவற்றின் மூலம் ஆதரவை |
| மருத்துவர்கள் மற்றும் செவிலியர் பயிற்சி பெறுநர் | • சிறப்பு மிக்க மதிப்பீடுகள் மற்றும் பராமரிப்பை வழங்குகிறது<br>• தேவைக்கேற்ப மருந்துகளை மீளாய்வு செய்து பரிந்துரைக்கிறது |

| குழு உறுப்பினர் பங்கு | பங்கு பற்றிய விளக்கம (தொடர்ச்சி) |
|---|---|
| தொழில்சார் சிகிச்சையாளர் | • குழந்தைகள் அவர்களுக்குத் தேவையான மற்றும் விருப்பமான விஷயங்களை அத்தகைய இடங்களில் மற்றும் அவர்களுக்கு முக்கியமானவர்களுடன் சேர்ந்து செய்யக் குழந்தைகளுக்கு உதவுகிறது<br>• பராமரிப்பில் உள்ளடங்குபவை: பயிற்சி வழங்குதல், ஆலோசனை வழங்குதல், திறன் வளர்ப்பு, சூழ்நிலைக்கு ஏற்பத் தகவமைத்துக் கொள்ளும் திறன் அல்லது நடவடிக்கைகளை மாற்றியமைத்தல் |
| பதிவு பெற்ற உணவியல் நிபுணர் | • உட்கொள்ளும் உணவு தொடர்பான ஊட்டச்சத்து மதிப்பீடுகள் மற்றும் திட்டத்தை வழங்குதல்<br>• முறையான ஊட்டச்சத்து நிலையை உறுதிசெய்ய மற்ற குழு உறுப்பினர்களுடன் இணைந்து செயலாற்றுகிறது |
| பதிவு பெற்ற செவிலியர் | • மருத்துவப் பராமரிப்பு தொடர்ந்து முறையாக நடைபெறுவதை உறுதிசெய்ய மருத்துவர்கள் மற்றும் செவிலியர் பயிற்சி பெறுநர்களுடன் நெருக்கமாக இணைந்து பணியாற்றுகிறது<br>• மருந்து வழங்கல் தொடர்பான இலக்குகளுக்கு குடும்பத்திற்கான முக்கிய தொடர்பு மையமாகச் செயல்படுகிறது<br>• பரிந்துரைக்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவைகள் மற்றும் சேவைகளுக்கான தெளிவை உறுதி செய்யப் பராமரிப்பு வழங்குநருடன் தொடர்பிணைப்பை மேற்கொள்கிறது |
| குடும்ப நல மருத்துவர் | • ஆரோக்கியத்திற்கான சமூக மற்றும் உணர்வுப் பூர்வ அம்சங்களுக்கு பராமரிப்பு ஆதரவை வழங்குகிறது<br>• குடும்ப உறுப்பினர்கள் மற்றும்/அல்லது பராமரிப்பு வழங்குநர்களுக்கு இடையேயான உறவுகளின் இயக்க ஆற்றல் மற்றும் தாக்கத்தின் மீது கவனம் செலுத்துகிறது |
| பேச்சு மொழி நோயியல் மருத்துவர் | • பேச்சு, மொழி மற்றும் சமூக தகவல் தொடர்பு திறன்களின் மேம்பாட்டுக்கு ஆதரவளிக்கிறது<br>• குழந்தைகளுடன் நேரடியான தொடர்புகளின் அடிப்படையில் பணியாற்றுகிறது மேலும் மருத்துவக் குழு மற்றும் சமூக வழங்குநர்களுக்கு பராமரிப்பு வழங்குநர் பயிற்சி மற்றும் ஆலோசனைகளை வழங்குகிறது |

எனது முதன்மை மருத்துவர்:

எனது ENS குழு உறுப்பினர்கள்:

எனது முன்னேற்ற நிலை சரிபார்ப்பு தேதிகள்:

3 மாதங்கள்:

6 மாதங்கள்:

மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்ட நாள்:

எனது கேள்விகள்:

# கூடுதல் தகவல்

## இடை ஓய்வு

சிக்கலான தேவைகளைக் கொண்டுள்ள குழந்தைக்குத் தொடர்ந்து இடைவிடாத பராமரிப்பு வழங்குவதில் சிரமம் இருக்கலாம். குழந்தைக்கு மட்டுமல்ல உங்களுக்கும் ஆதரவு கிடைக்க வேண்டியது மிகவும் முக்கியம். இடைவிடாது தொடர்ச்சியாகப் பராமரிப்பு சேவையை வழங்குவதிலுள்ள சவால்களிலிருந்து தற்காலிக நிவாரணத்தை இடைஓய்வு பராமரிப்பு உங்களுக்கு வழங்கும்.

Holland Bloorview மற்றும் VHA Home HealthCare (VHA) எக்ஸ்டென்சிவ் நீட்ஸ் ரெஸ்பைட்டை வழங்குவதற்கு கூட்டாண்மை அமைத்துள்ளன. இந்த இடை ஓய்வுத் திட்டம் ENS -இல் குழந்தைக்குப் பராமரிப்பு சேவை வழங்கும் தனி நபர்களுக்கு குறுகிய கால நிவாரணத்தை வழங்குகிறது. ENS குழு, VHA உடன் நீங்கள் ஒன்றிணைந்து, குழந்தையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான இடை ஓய்வு நடவடிக்கைகள் மற்றும் இலக்குகளை உருவாக்குவீர்கள்.

இடை ஓய்வு என்பது உங்கள் மற்றும் குழந்தை இருவரின் உடல் ஆரோக்கியத்தையும் நல வாழ்வையும் மேம்படுத்தும்.

### இடை ஓய்வு குறித்த குறிப்புக்கள் அல்லது கேள்விகள்:

## பாதுகாப்பு திட்டமிடல்

பாதுகாப்பு வருகை தொடர்பாக சில குழந்தைகளுக்கு கூடுதல் ஆதரவு தேவைப்படலாம். வாடிக்கையாளர்களைப் பாதுகாப்பாக வைத்திருப்பதில் உதவுவதற்கான மிகக் குறிப்பிடத் தகுந்த பயிற்சி நடைமுறைகளை ENS குழு கொண்டுள்ளது. இந்தக் குழுவானது, குழந்தை ENS -இல் இருக்கும்போது அல்லது அதற்கு முன்பாக ஒரு தனிப்பட்ட பாதுகாப்புத் திட்டத்தை உருவாக்க உங்களுடன் இணைந்து செயல்படும். திட்டத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து நீங்கள் அறிந்திருப்பதை நாங்கள் உறுதி செய்வோம். இது குழந்தை மற்றும் எங்கள் ஊழியர்கள் பாதுகாப்பாக இருக்க உதவுகிறது.

நடத்தையை மேம்படுத்தப் பயன்படுத்தப்படும் இதர அனைத்து உத்திகளும் (உதாரணம், தூண்டுதல்களை அகற்றுதல், சுற்றுச் சூழலை மாற்றியமைத்தல்) செயல்படாவிட்டால், இறுதி விருப்பத்தேர்வாக உடல் ரீதியான கட்டுப்படுத்தல் நடைமுறைகள் பின்பற்றப்படும். நடத்தைகள் பாதுகாப்பற்ற வகையில் இருக்கும் சந்தர்ப்பங்களில் குழந்தைக்குப் பயன்படுத்தப் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகள் ஏதாவது இருந்தால் அதனை ENS குழுவிடம் முன்கூட்டியே தெரியப்படுத்தவும்.

**அவசர நிலை:** குழந்தை ENS குழு அல்லது மருத்துவமனை அலுவலர்களால் பாதுகாப்பாக நிர்வகிக்க முடியாத அளவில் பாதுகாப்பற்ற நடத்தையை வெளிப்படுத்தினால், பாதுகாப்பாளர் மற்றும்/அல்லது 911 எண்ணைத் தொடர்புகொள்ளலாம். பாதுகாப்பாளர் மற்றும்/அல்லது 911 எண்ணை எப்போது தொடர்புகொள்ள வேண்டும் என்பது குறித்த தகவலை நீங்கள் தெரிந்து வைத்திருப்பதைத் தனிப்பட்ட பாதுகாப்புத் திட்டம் உறுதி செய்யும். அடுத்த கட்ட நடவடிக்கைகள் மற்றும் எதிர்கால பராமரிப்பு திட்டமிடல் குறித்து உங்களுடன் கலந்துரையாட பின்தொடரல் நடவடிக்கைகளை ENS குழு மேற்கொள்ளும்.



## அளவீடுகளின் அடிப்படையிலான பராமரிப்பு



வாடிக்கையாளர்கள், பராமரிப்பு வழங்குநர்கள் மற்றும் மருத்துவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து தனிப்பட்ட பராமரிப்பு சிகிச்சையை வழங்குவார்கள். குழந்தை பராமரிப்பு நடைமுறைகளின் முன்னேற்றத்தைத் தொடர்ந்து கண்காணிக்கவும், முடிவுகளை எடுக்கவும் தேவையான தகவல்கள் உங்களிடமிருந்தும், குழந்தையிடமிருந்தும், மருத்துவர்களிடமிருந்தும் சேகரிக்கப்படுகின்றன. தகவல்களைச் சேகரிக்க வரையறுக்கப்பட்ட கேள்வித்தாள்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்தச் செயல்முறை அளவீட்டு அடிப்படையிலான பராமரிப்பு என்று அழைக்கப்படுகிறது.

அளவீடுகளின் அடிப்படையிலான பராமரிப்பில் உள்ளடங்குபவை:

- பின்வருபவை குறித்த தகவல்களை முன்கூட்டியே பகிர்ந்து கொள்ளுதல்:
    - குழந்தையின் தற்போதைய நடத்தை செயல்பாடுகள்
    - பயன்படுத்தப்பட்ட சேவை வகைகள்
    - குடும்பத்தினர் அனுபவித்த மன அழுத்தம்
    - வாழ்க்கைத் தரம்
- ஒவ்வொரு மாதமும் ஒரு சிறு கேள்வித்தாளைப் பூர்த்தி செய்தல்
- மூன்று மாதங்களுக்கு ஒருமுறை ஒரு நீண்டகேள்வித்தாளைப் பூர்த்தி செய்தல்


இந்தத் தகவல்கள் பின்வருபவை தொடர்பானவற்றிலும் பயன்படுத்தப்படும்:

- ENS -இல் உங்கள் குழந்தையின் பராமரிப்பு நடைமுறைகளை மேம்படுத்த
- Holland Bloorview -இல் திட்டங்களை மாற்றியமைக்க மற்றும் மேம்படுத்த

நீங்கள் ஒப்புதலளிக்கும் பட்சத்தில் சேகரிக்கப்பட்ட தகவல்கள் இதர காரணங்களுக்காகவும் பயன்படுத்தப்படலாம். Holland Bloorview மற்றும் ஒன்ராறியோ முழுவதும் திட்டத்தின் செயல்திறனை மதிப்பிடுவதற்கான ஆய்வு ஆராய்ச்சி செயல்பாடுகள் இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. உங்கள் தகவல்கள் எவ்வாறு பயன்படுத்தப்படும் என்பதைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு கடிதத்தை ENS குழு உங்களுக்கு வழங்கும். உங்கள் தகவல்களை அத்தகைய வழிமுறைகளில் ENS பயன்படுத்த நீங்கள் விரும்புகிறீர்களா இல்லையா என்பதை நீங்கள் முடிவு செய்யலாம். எதிர்காலத்தில் ENS உங்கள் தகவல்களைப் பயன்படுத்துவதையும் நீங்கள் நிறுத்தக் கோரலாம்.

### குறிப்புகள்:

# கூடுதல் தகவல்



## குறிப்புகள்:

# ஏற்பிசைவுகள்

ENS குழு, எவிடென்ஸ் டு கேர் மற்றும் குடும்பத்தினர் ஆசிரியர்களாக இருக்கிறார்கள் ஆகியவற்றின் உறுப்பினர்களால் எக்ஸ்டென்சிவ் நீட்ஸ் சர்வீஸுக்கு வரவேற்கிறோம் உருவாக்கப்பட்டது.

## வளர்ச்சி குழு

| | |
|---|---|
| Kathryn Decker | Tamara Milicevic |
| Rhonda Hatrick | Anjali Mulligan |
| Sarah Holman | Mia Parnes |
| Meena Kadiwal | Christine Provvidenza |
| Shauna Kingsnorth | Gunjan Seth |
| Toni Lui | Marissa Seymour |
| Sheri McClement | Justine Wiegelmann |

## நிதியுதவி

எக்ஸ்டென்சிவ் நீட்ஸ் சர்வீஸ் Children's Hospital of Eastern Ontario, Holland Bloorview, and McMaster Children's Hospital ஆகியோர் இணைந்து கூட்டாக நடத்தப்படுகிறது மற்றும் இதற்கு Ontario Ministry of Health and Ministry of Children, Community and Social Service ஆகியோர் நிதியுதவி வழங்குகிறார்கள்.

**எக்ஸ்டென்சிவ் நீட்ஸ் சர்வீஸின் வரவேற்பின்** வளர்ச்சிக்கு கொடையாளிகள் மற்றும் Holland Bloorview Kids Rehabilitation Hospital Foundation மனமுவந்து தாராளமாக ஆதரவளித்து வருகிறார்கள்.



## இந்த வள ஆதாரங்கள் உங்கள் எக்ஸ்டென்சிவ் நீட்ஸ் சர்வீஸ் பயணத்திற்கு பெருமளவில் பயனளித்திருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.



Holland Bloorview Kids Rehabilitation Hospital
150 Kilgour Road, Toronto, Ontario Canada M4G 1R8
**Tel** 416 425 6220 | **Toll free** 1 800 363 2440 | **Fax** 416 425 6591
hollandbloorview.ca

Holland Bloorview
Kids Rehabilitation Hospital